## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 24–ஆம் நாள் வியாழக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆடித் திங்கள் 08–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.125/2016 –ல்**

**இடைநிலை மனு எண்.3/2025**

**1.G.ஜெயா (இறப்பு)**
**2.K.கோவிந்தன்**
**3.சாரதா**
**4.தேவகி**
**5.ஆனந்தி ... மனுதாரர்கள்/வாதிகள்**

**–எதிர்–**

**1.P.சுந்தர்ராஜன்**
**2.T.சின்னப்பிள்ளை**
**3.G.ஏழுமலை**
**4.சாந்தி**
**5.கோகிலா**
**6.லலிதா**
**7.பாக்கியம் அம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு 22.07.2025-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. K. M. ஜெயபால்** அவர்களும் 01 முதல் 06-வரையிலான எதிர்மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையில் 07-ஆம் எதிர்மனுதாருக்காக வழக்குரைஞர் **திரு. V. மணிவண்ணன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை

நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

**ஆணையுரை**

இந்த முதலேற்பு வழக்கை 07-ஆம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் திரும்ப பெறுவதற்கு மனுதாரர்கள்/வாதிகளால் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 23-ஆம் வகுமுறையின் 01-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் 02-வாதி ஆவார். மனுதாரர் இந்த மனுவை தனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் தாக்கல் செய்கிறார். மனுதாரருக்கு வழக்கின் சங்கதிகள் முழுக்கத் தெரியும்.

02. வழக்குச் சொத்தைப் பொறுத்துப் பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரி 01 முதல் 06-வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்கள்/ வாதிகள் முதலேற்பு வழக்கை தொடுத்தனர். அந்த வழக்கில் 07-ஆம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தரத் தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ளனர்.

03. 07-ஆம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினராக உள்ளார் என்று தற்போது தெரியவருகிறது. 07-ஆம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினையில் சம்மந்தம் இல்லை. ஆகையால், 07-ஆம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொள்ள மனுதாரர்கள்/வாதிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

**07–ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம்.**

04. 07-ஆம் எதிர்மனுதாரர் பல சங்கதிகளை எதிருரையில் கூறியிருந்தாலும் இந்த மனுவை முடிவுசெய்வதற்கு தேவையான சங்கதிகளை மட்டுமே இந் நீதிமன்றம் குறிப்பிடுகிறது. மனுதாரர்கள்/ வாதிகளுக்கும் 01 முதல் 06 வரையிலான பிரதிவாதிகளுக்கும் வழக்குச் சொத்துமீது எவ்வித உரிமையும் இல்லை. 06.10.1958-ஆம் தேதியிட்ட ஆவண எண்.3729/1958 என்ற விற்பனை ஆவணத்தின் அடிப்படையிலும் 20.06.2002-ஆம் தேதியிட்ட ஆவண எண்.2188/2002 என்ற விடுதலை ஆவணத்தின் அடிப்படையிலும் வழக்குச் சொத்துக்கள் 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதிக்கு சொந்தமானது ஆகும். வழக்குச் சொத்துக்கள் 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதியின் சுவாதீன அனுபோகத்தில் இருந்துவருகின்றன. வழக்குச் சொத்துக்களுக்கான வருவாய் துறை ஆவணங்களும் 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளன.

05. வழக்குச் சொத்தைப் பொறுத்துப் பாகப்பிரிவினை கோரி வாதிகள் தாக்கல்செய்த இந்த வழக்கும் வழக்குச் சொத்தைப் பொறுத்து உரிய நிவாரணம் கோரி 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி முதலில் சேலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்து பின்னிட்டு இந் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு முதலேற்பு வழக்கு எண்.270/2018 ஆக நிலுவையில் இருந்துவரும் இந்த வழக்கும் சேர்த்து இணையாக நடத்தப்பட்டுவருகின்றன. இந்த வழக்கிற்கு அடிப்படையாக

மனுதாரர்கள்/வாதிகள் சொல்லும் சுவாதீன ஒப்படைப்பு இரசீது என்ற ஆவணம் பதிவுசெய்யப்படாத முத்திரைக்கட்டணம் செலுத்தப்படாத வெறும் தாளில் எழுதப்பட்ட ஒரு பொய்யாக புனையப்பட்ட ஆவணம் ஆகும். அந்த ஆவணம் மனுதாரர்கள்/வாதிகளுக்கும் 01 முதல் 06 வரையிலான பிரதிவாதிகளுக்கும் வழக்குச் சொத்தின்மீது எவ்வித உரிமையும் அளிக்காது. வழக்குச் சொத்தின் உண்மையான உரிமையாளர் 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி ஆவார். அவர்தான் இந்த வழக்கிற்கு மிகவும் அவசியமான தரப்பினர் ஆவார். அவரை நீக்கிவிட்டு இந்த வழக்கில் எவ்வித முடிவும் செய்யமுடியாது. மனுதாரர்கள்/வாதிகள் 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதியை நீக்கிவிட்டு கூட்டுச் சதியாக சட்டவிரோதமாக தீர்ப்பும் தீர்ப்பாணையும் பெற முயற்சி செய்கின்றனர். ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

06. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

07. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குரை எதிர்வழக்குரை ஆகிய இரண்டிலும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளும் சான்றுரைகளும் பரிசீலிக்கப்பட்டன. 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள 1958-ஆம் ஆண்டு விற்பனை பத்திரம் மற்றும் 2002-ஆம் ஆண்டு விடுதலைப் பத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி

வழக்குச் சொத்துக்கள்மீது உரிமை கொண்டாடுவதாகவும் அது சம்மந்தமாக ஏற்கனவே உரிமை வழக்குகள் நடந்து 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி நலச்சார்பாக முடிந்ததாகவும் அதன்மீது தாக்கல்செய்யப்பட்ட மேல்முறையீட்டிலும் அவ்வாறே முடிவுசெய்யப்பட்டதாகவும் வாதுரைகள் காட்டுகின்றன. வழக்குரையில் 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதிக்கு எதிராக கடுமையான சான்றுரை சொல்லப்பட்டுள்ளது. வழக்குச் சொத்தின்மீது 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி உரிமை கொண்டாடுவதாகவும் சான்றுரைக்கப்பட்டுள்ளது.

08. வழக்கின் ஒட்டுமொத்த சங்கதிகளும் சான்றுகளும் சூழ்நிலைகளும் வழக்குச் சொத்துமீது 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராகவும் 01 முதல் 06 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராகவும் திட்டவட்டமாக உரிமை கோருகிறார் என்பதும் வழக்குச் சொத்துக்கள்மீது மேற்சொன்னவர்களுக்கு உரிமையே இல்லை என்று மறுகிறார் என்பதும் தெரியவருகிறது. இந்நிலையில் இந்த வழக்கிலிருந்து 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதி நீக்கப்பட்டால் அதாவது அவருக்கு எதிரான வழக்கு திரும்பப் பெறப்பட்டால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத குறைபாட்டிற்காக பாதிக்கப்படும். இந்த வழக்கின் அடிப்படையே 07-ஆம் எதிர்மனுதாரர்/07-ஆம் பிரதிவாதியின் எதிர்வாதத்தை சார்ந்ததாக உள்ளது. ஆகையால், இந்த மனுவை அனுமதிக்க முகாந்திரம் இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்து இந்த மனுவை தள்ளுபடி செய்கிறது.

**இறுதிமுடிவு**

09. இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 24–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

உண்மை/வரைவு ஆணையுரை
இ.ம.எண்.3/2025 in மு.வ.எண்.125/2016
நாள் 24.07.2025